
# குறைபாட்டுக் குழந்தைகள்/மனிதர்



சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத்தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

**2003-11-01**


**க. மகேசன் B.A.Dip**
**இ.க.சே.தரம் II**

6, இராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# குறைபாட்டுக் குழந்தைகள்/ மனிதர்

I நுண்ணறிவு

II தாய் - சேய் 01. கெற்பகால காரணிகள்

02. பிரசவகால காரணிகள்

III தவறான குழந்தை வளர்ப்பு 3 பிறந்த பின் வரும் காரணிகள்

01. அறிமுகம்

02. குழந்தைமையக் குடும்பம்

03. தாய் வயிற்றில்

04. நீராட்டுதல்

05. உணவு, சுத்தம், சுகாதாரம்

06. சில ஒழுங்கீனம்

07. குழந்தையின் பிடிவாதமும் அழுகையும்

08. குழந்தைக்கு எரிச்சல் உண்டாக்கும் செயல்கள்

09. பயங்கர செயற்பாடுகள் சில

10. ஒலி, ஒளி தாக்கம்

11. ஆடை அணிகள்

12. கல்வியில் தேவையற்ற தலையீடு

13. மக்கட்பேறு - திருக்குறள்

14. தவறான குழந்தை வளர்ப்பால் உண்டாகும் பின்விளைவுகள் சில

# குறைபாடுக் குழந்தைகள்/ மனிதர்:

குழந்தைகளின் நுண்ணிறிவை/மதிநுட்பத்தை அளவீடு செய்வதற்கான ஓர் உத்தியை உளவியலாளர் வகுத்திருக்கிறார்கள் அதன்படி

I உளவளர்ச்சி x100
உடல் வளர்ச்சி = நுண்ணறிவு

இங்ஙனம் கணிக்கப்பெற்ற நுண்ணறிவு
70க்கும் குறைவானால் அவர் மந்த குணம் உடையவர்
70-90 கற்றல் குறைபாடுடையவர்
90-110 சாதாரண அறிவுள்ளவர்
110-120 திறமை மிக்கவர்
120-140 மிகத் திறமையுடையவர்
140 க்கு மேல் மேதை

ஒருவர் பிறப்பினால் பெறும் பாரம்பரிய அறிவு 40% மட்டும் மிகுதி 60% சூழல் காரணிகளால் உளதாகும்.

01. மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு
அதிநுட்பம் யாவுள முன்னிற் பவை

02. அரம் போலும் கூர்மையரேனும்
மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்.

மதிநுட்பம் என்பது நுண்ணறிவு வள்ளுவர் வாக்கின் படி ஒருவர் இவ்வுலகிலே சிறப்பாக வாழ்வதானால் அவரிடம் நுண்ணறிவு நூலறிவு, மக்கட் பண்பு ஆகிய மூன்று பண்புகளும் சமநிலையில் விளங்குதல் இன்றியமையாதது. அத்தகையோரை மேதைகள் என்றோ ஞானிகள் என்றோ அழைக்கலாம்.

உலகில் உடல் ஊனமுற்றவர்களைவிட உளநோயுற்றவர் அநேகம். வீட்டுக்கு வீடு நாட்டுக்கு நாடு உண்டாகும் முரண்பாடுகளுக்கு இந்த உளக் குறைபாடுகளே காரணம் என்பதை அநேகமாக யாரும் அறியார். இதனால் எழுத்தறக் கற்றவரும் மரமாகலாம் என்பது வள்ளுவம்.

மேற்படி காரணங்களால் வயிற்றிலே வளரும் குழந்தைக்கு உண்டாகும் மறைமுகத் தாக்கம் உயிருள்ளளவும் அவரின் நடத்தையைப் பாதிக்கும்.

பேச்சுத் தடுமாற்றம் விகாரமான சிந்தனை செயல்கள், முரண்நடத்தை கல்வியில் நாட்டமின்மை, வீண்முயற்சி முதலியன அவருடைய முன்னேற்றத்துக்கு தடையயாகவிருக்கலாம்.

## II தாய் ~ சேய்:~

### 01. கற்ப்பகால பௌதீகக் காரணிகள்:~

01. தாயின் ஊட்டக் குறைபாடு
02. விளைவு மாத்திரைகள்
03. தொற்று நோய்கள்
04. கதிர்வீச்சுகுட்படுதல்
05. இரத்தச் சோகை
06. நச்சுக்கொடியின் செயற்பாடின்மை
07. தாய் - கரு குருதி உடன்பாடின்மை (Rhfactor)
07. கருக்கலைக்கும் முயற்சியில் தோல்வி
09. விபத்து

### 02. பிரசவகாலக் காரணிகள்:~

01. நீண்ட நேரப் பிரசவ காலம்
02. பிறப்பதற்கு முன் பனிக்குடம் உடைதல்
03. நச்சுக்கொடி குழந்தையின் கழுத்தைச் சுற்றி நெருக்குதல்
04. பீட்டப் பிரசவம்
05. ஆயுதப் பிரசவம்
06. அதிக உதிரப் போக்கு
07. குறுகியபிறப்பு வழி
08. பெருத்த தலை

### 03. குழந்தை பிறந்த பின்னர் வரும் காரணிகள்:

01. அழுகை தாமதம்
02. பிராண வாயுக் குறைபாடு
03. வலிப்பு நோய்
04. கூடிய காய்ச்சல்

05. மூச்சுத் திணறல்
06. தலைக் காயம்
07. உளநலக் கோளாறு
08. அதிக மருந்து மாத்திரைகள்
09. ஊட்டக் குறைபாடு
10. தூண்டல் குறைபாடு.

## III தவறான குழந்தை வளர்ப்பு

### 01. அறிமுகம்:~

இயல்பாக எல்லாக் குழந்தைகளும் (புறநடை தவிர) பகுத்தறியும் உடல், உள நலமும் பெற்றவராகவே உள்ளனர். இருப்பினும், சின்னம் சிறு வயதிலேயே அவர்கள் உளவியல் அறிவியலற்ற முட்டாள்கள் - பெற்றோரும் மற்றோரும் - கையில் அகப்பட்டு தமது இயல்பான ஆளுமையை இழந்து விடுகின்றனர்.

தாவரங்கள் உயர்ந்து பரந்து வளர்ந்து அழகுற நிற்பன, வன விலங்குகளும் அவ்வாறே தத்தம் தனித் தன்மையிற் சிறந்து விளங்குவன.

ஆனால் குழந்தைகள் மட்டும் அங்ஙனம் இயல்பாக வளர முடிவதில்லை. இதற்குப் பெற்றோரின் பிறழ்வான குழந்தை வளர்ப்பு முறையே காரணமாகும். சில நாட்டு, இன மத குடும்ப மரபில் வளர்க்கப் பெற்றவர்கள் ஒட்டு மொத்தமாக வாழ்க்கையிலே பின்தங்கியிருப்பதற்கும், வேறு சில நாட்டு, இன, மத குடும்ப மரபில் வளர்ந்தவர்கள் முன்னேறியிருப்பதற்கும் அன்னாரின் குழுந்தை வளர்ப்பிலே உள்ள வேறுபாடு காரணமாகலாம்.

கடந்த இரு நூற்றாண்டுகளாக, உளவியலாளர், "குழந்தையை வளரவிடுங்கள்" என்று அறைகூவி வருகின்றனர். அதே சமயம் "உலகம் இப்படித்தான் இருக்கும் அதனைத் திருத்தவோ, மாற்றவோ யாராலும் முடியாது" என்று பாமரர் மட்டுமன்றிப் படித்தவரும் கூறி வருகிறார்கள். பாடசாலைக் கல்வியும் பல்கலைக்கழகக் கல்வியும்கூட தற்போதய குழப்ப நிலை தொடரும் வகையிலேயே அமைந்துள்ளன.

## 02. குழந்தை மையக் குடும்ப வாழ்வு

ஓர் ஆசிரியர் வகுப்பறையில் மாணவர் மையக் கற்பித்தல் முறையை மேற்கொள்ள வேண்டும். அதுவே சிறந்த கற்பித்தல் முறை என்பது உளவியல், அதே போன்று ஒரு தம்பதியினரின் குடும்ப வாழ்வு அன்னாரின் குழந்தைகள் மையமாக அமைவதே சிறப்பு அதாவது செயல்கள் யாவும் குழந்தையின் சுகவாழ்வு, விருத்திக்கு உதவுவதாக அமைதல், அன்னார் அனுபவிக்கும் சுகபோகங்கள் - படம் பார்த்தல், விருந்துண்ணல், திருவிழாக் காண்டல், வேறு வகையான பொழுதுபோக்கு என்பன குழந்தைகளுக்கு எவ்வித பாதகமான தாக்கத்தை மனமுறிவை ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆயினும் அநேக குடும்பங்களில் பெற்றார் குழந்தைகளைப் புறக்கணித்துவிட்டு தமது பணிகளில் ஈடுபட்டு வருவது கண்கூடு குழந்தையானது பெற்றார் பெரியவர்களின் மகிழ்ச்சிக்கும் பொழுது போக்குக்கும் உரிய ஒரு கருவியாகக் கருதப்படுவதே யன்றி, உடல், உள உணர்வுள்ள புதுமை, புனிதம் வாய்ந்த கடவுளின் கொடை என்பதை அவர்கள் உணர்வதில்லை. ஏதோ ஒரு பிடி களி மண்ணை வைத்துக் கொண்டு தமக்கு இசைவான ஒரு பாவையை இயற்றிவிடலாம் என தப்புக் கணக்கு போடுகிறார்கள். நன்றாகப் படித்தவர்களும் இதற்கு விதி விலக்கல்லர்.

## 3. தாய் வயிற்றில்

குழந்தை (சிசு) தாயின் வயிற்றிலே உற்பத்தியாகும் காலத்தும், வளர்ந்து வரும் காலத்தும் பெற்றார் கவனக் குறைவாக விருத்தல் தம்முள் முரண்பட்டு சண்டையிடுதல், பிரிந்திருத்தல், ஏதாவது தீராத பிரச்சினையில், துயரத்தில் ஆழ்ந்திருத்தல், தீச் செயல்களிலீடுபடுதல், கர்ப்பவதிக்கு அச்சம், அதிர்ச்சி உண்டாகும் வகையில் உறவினர் மறைவு, குண்டு வெடிப்பு, தீயினால் தீயவரால் சொத்துக்களை இழத்தல், வேலை பறிபோதல்.

இவை போன்ற காரணங்கள் வயிற்றிலே வளரும் சிசுவினால் நுகரப் பெற்றுப் பின் விளைவுகளை உண்டாக்கும் என்பதைப் பெற்றார் அறியாதிருத்தல்.

குழந்தையின் மூளை வளர்ச்சி தாயின் வறிற்றிலேயே முற்றுப் பெறுவதால் இக்காலம் மிக மிக முக்கியம் வாய்ந்தது.

## 4. நீராட்டுதல்:-

அதிகம் குளிரான சூடான நீரிலே குளிக்க வைத்தல். ஆழமான நீருள்ள தொட்டியில் குளம் குட்டைகளில் நீராட்டுதல், உடல், வெப்ப தட்ப சமநிலையைப் பேணுதற்கென கடவுளின் கொடையாக அமைந்த வியர்வை, சரும எண்ணெய் ஆகியவற்றை அழுக்கு எனக் கருதும் பிழையான விளக்கத்தால் குழந்தையை அடிக்கடி, அகால வேளைகளிலும் நீராட்டுதல்.

## 5 உணவு:- சுத்தம் சுகாதாரம்

குழந்தையின் உணவு உடை சுத்தம் சுகாதாரம் ஆகியவற்றில் அக்கறைபற்றிருத்தல் மூக்குநீா வடிதல், தடிமன் காய்ச்சல், காயங்கள், சொறி, சிரங்கு ஆகியவற்றைப் பொருட்படுத் தாமை. நோய்தடுப்பு ஊசி மருந்துகளை உரிய காலத்தில் கொடுக்காதிருத்தல் குழந்தையின் உணர்ச்சிவயமான தேவைகளைப் புறக்கணித்தல் அத்தியாவசிய தேவையான மலசலம் கழித்தலில் அக்கறையற்றிருத்தல், குழந்தை ஓரளவு திருப்பதியடைந்து, போதும் போதும், வேண்டாம் வேண்டாம் என்று கத்தி அழும் நிலையிலும் ஏமாற்றியோ, பலோற்காரமாகவோ பாலை, உணவைத் திணித்தல்

மூத்த குழந்தைகளை இளைய குழந்தைகளைப் பராமரிக்கவும் வேறு வகையில் வேலையாளாகவும் பாவித்தல்

## 6. சில ஒழுங்கீனங்கள்

குழந்தையை எவரினதும் மேற்பார்வையின்றித் தனியாக உலாவவிடுதல், அயல்வீடுகளில் பிற குழந்தைகளுடனோ, வேலை யாட்களுடனோ விடுதல், குழந்தைக்கு விருப்பமில்லாத உடலின் பகுதிகளைத் தொடுதல், தட்டுதல், கூச்சங்காட்டுதல்.

குழந்தையை தூங்க வைப்பதற்கும், அழுகையை ஆற்றுவதற்கும் சில பாமரமக்கள் குழந்தையின் பாலுறுப்புக்களைத் தட்டித் தடவிக் கொடுப்பர் இதனால் சிறு வயதிலேயே குழந்தைகள் தீய செயல்களிலீடுபட வாய்ப்புண்டு

## 07 குழந்தையின் பிடிவாதமும், அழுகையும்

துடிப்பான குழந்தை எந்த நேரமும் ஏதோ ஒன்றைக் கேட்டுக் கொண்டேயிருக்கும் பெற்றார் மறுத்தாலும் இரந்து கேட்டுக் கொண்டேயிருக்கும், ஈற்றிலே அம்மா என்று கத்தி அழும் இச்சந்தர்ப்பத்தில் பெற்றோரின் கொடுமைகள் பல திறம். குழந்தையின் குரலுக்கு மேலாக உரத்த குரலில் வளவள என்று கர்ச்சித்தல், அழாப்புதல், குழந்தையின் வாயைப் பொத்துதல் ஏமாற்றுதல் பண்பாடற்ற வார்த்தைகளாற் பேசுதல், பேய், நாய், பிசாசு எனப் பயங்காட்டுதல் குழந்தையின் ஒரே யொரு ஆயுதம் அழுகைதான் அதையும் புறக்கணித்தல் அதன் நிலையான மன முறிவுக்கு இட்டுச் செல்லும்

## 8. குழந்தைக்கு எரிச்சலுண்டாக்கும் செயல்கள்

சிறப்பு வைபவங்கள் கனவான்களின் ஒன்று கூடல் ஆகியவற்றின் நீண்ட நேரம் குழந்தைகளுக்கு அழுத்தம் கொடுத்தல், எரிச்சல், களைப்பு மனச் சோர்வு உண்டாகும் படி நடந்து கொள்ளுதல்.

சிரிப்பதாயினும் அழுவதாயினும் அது ஒரு சில நிமிடங்களுக்கு மேல் நீடிக்கக் கூடாது குழந்தைகள் சடப்பொருள்களு மல்ல அப்பாவிகளும் அல்லர் அவர்கள் பகுந்தறி வுள்ளவர்கள் பெரியவர்களின் முட்டாள்தனத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் அவர்களுக்குண்டு அவர்கள் வளர்ந்த பின்னர் இந்த ஈனர்கள் செய்த கொடுமைகளை நினைந்து மனம்வருந்துவர்.

## 09 பயங்கரமான செயல்கள்

தீ வெந்நீர் மின் கருவிகள் உடையும் பொருள்கள் குழந்தைக்கு எட்டக் கூடிய இடங்களில் வைத்தல் உயரமான மரங்களில், வீட்டுக் கூரையில் ஏற வைத்தல் மரத்தில் தொங்க விடுதல் உயரஎறிந்து ஏந்துதல் தலைகீழாகப் பிடித்தல் வேகமாக ஓடும் திறந்த வாகனங்களிற் கூட்டிச் செல்லுதல், தூக்கம் ஓய்வைக் கெடுக்கும் வகையிலான செயற்பாடுகளிலீடுபடுதல். இவை பாரதூரமான பின் விளைகளை ஏற்படுத்தும்.

## 10. ஒலி ஒளியின் தாக்கம்

சகிக்க முடியாத ஒலிகளைக் கேட்டல், பிரகாசமான ஒளியிலே தூங்க வைத்தல்

சகிக்க முடியாத சண்டைக்காட்சிகள், பயங்கர கொலைகள், குழந்தைகள் அநாதரவாக விடப்படுதல் தாய் - சேய் பிரிவு குடும்பச் சண்டைகள் முதலிய துன்பியல் தொலைக்காட்சிப் படங்களைக் குழந்தையின் வெறுப்புக்கு மத்தியில் பார்க்கச் செய்தல்.

## 11 ஆடை அணிகள்

நாகரிகத்தின் பெயரால் தடித்த, பாரமான, இறுக்கமான மேனாட்டுப் பாணியிலமைந்த ஆடை ஆபாரணங்களை நீண்ட நேரம் அணிந்திருக்கச் செய்தல்.

செயற்கை நூல்களாலான பஞ்சாபி, நீளப் பிஜாமா, காலுறையுடன் கூடிய இறுக்கமான சப்பாத்து அணிதல், சூழலைப் பொருட்படுத்தாது இந்நாட்டுப் பாடசாலை நிர்வாகம் அதனைக் கட்டாயப் படுத்தியிருத்தல், இவற்றால் வரும் பின்விளைவுகள் மிகப் பாரதூரமானவை.

## 12. கல்வியிலே தேவையற்ற தலையீடு

பள்ளி வகுப்பறையில் நான்கு சுவர்களுக்குள்ளிருந்து கற்பது மட்டும் கல்வியாகாது ஆயினும் அநேக பெற்றார் கைநிறைய (Donation) கொடுத்து ஒரு பிரபல பாடசாலையிலே சேர்த்து விட்டாலே போதும் பிள்ளை நிறைவான கல்வியறிவுடன் வெளிவரும் எனக் கனவு காண்கிறார்கள்.

குழந்தைப் பருவத்திலேயே ஆரம்ப வகுப்புகளில் அது படிக்கவிருக்கும் பாடங்களையெல்லாம் கற்பிக்க முயற்சிக்கிறார்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைத் திணிப்பதில் பெருமையடைகிறார்கள் ஆனால் குழந்தை சுயமாகச் செயற்படவோ சுற்றுச் சூழலைப் பார்த்து ரசிக்கவோ அவதானிக்கவோ விடுவதில்லை அவர்களின் கற்பனை வளத்தை வெறும் விளல் என்று நினைப்பவர் பலர். விளையாட்டின் மூலம் அவர்கள் உடல் நலமும் உளநலமும் பெறுகின்றதோடு பலவாறான செயற்றிறமை தற்றுணிவு

தலைமைத்துவம் ஆகியவற்றையும் கற்றுக் கொள்கின்றனர். வினாக்கள் மூலம் அவர்கள் விஞ்ஞானியாகின்றனர். இவற்றையெல்லாம் மட்டம் தட்டித் தாம் சொல்வதை மட்டும் கிளிப்பிள்ளை போல குழந்தை பின்பற்ற வேண்டுமென நினைப்பவர் மூடர்.

குலத்தளவேயாகும் குணம் என்பது மூதுரை நற்பண்புள்ள நற்குடியிற் பிறந்தவர்கள் உளவியல் சார்ந்த அறிவுடையவர்கள், நல்லாசிரியர் ஆகியோரே உத்தம குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் தகுதியுடையவர்கள். உலகில் நிறைமொழி மாந்தர் வரிசையில் மிக உயர்ந்த இடத்திலிருக்கும் உத்தமர்கள் இத்தகைய குடும்பச் சூழலில் வளர்ந்தவர்களேயாம். குழந்தைகளைத் தம்மோடொத்த வயதினராகக் கொண்டு பேரம் பேசுதல் (Challenge) நிபந்தனை விதித்தல் குழந்தையின் மனவேதனையைப் பொருட்படுத்தாமல் அலட்டிக் கொண்டிருத்தல்.

### 13. மக்கட்பேறு- திருக்குறள் 20

01. பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
    மக்கட்பேறு அல்ல பிற
02. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
    பண்புடை மக்கட் பெறின்
03. குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
    மழலைச் - சொல் கேளாதவர்

### 14. (இன்னோடின்ன தவறான வளர்ப்பு முறையால் வாழ் நாள் முழுவதும் ஒருவனை வருத்தக் கூடிய குறைபாடுகள் பின்வருமாறு) தவறான குழந்தை வளப்பால் உண்டாகும் பின்விளைவுகள் சில

01. மனமுறிவு, மனநோய், தடுமாற்றம்
02. புலன்கள் செயலிழத்தல்
    சிறுவயதிலேயே மூக்குக்கண்ணாடி அணிதல்

03. பாலுணாச்சி அற்றுப்போதல் மலடு - பேடி - பால் - மாற்றம் ஆணின் மார்பிலிந்த மிகுதியாக முலைப்பால் சொரிதல்

04. அடிக்கடி வயிற்றோட்டம்

05. தொய்வு, முட்டு, சளி அடைப்பு

06. வயிற்றுப்புண், புற்றுநோய்

07. வலிப்பு, காக்கைவலி

08. இரத்த அழுத்தம், இதரஇருதய நோய்கள்

09. ஓயாத பெருமூச்சு, ஏக்கம் பகற்கனவு, மிதமிஞ்சிய தூக்கம்

10. விகாரமான சிந்தனை செயல்கள்

11. உரை தடுமாற்றம் கொன்னை

12. ஞாபகக் குறைவு

13. கல்வியில் பின்னடைவு

14. சொல்வன்னைமயின்மை

15. கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு முதலியவற்றில் பங்கு பற்றாது ஒதுங்கியிருத்தல்

16. பயங்கொள்ளி, துணிச்சலின்மை, தலைமைத்துவத்தை வெறுத்தல், சமூகப்பண்பு இன்மை

17. எடுத்த கருமங்களில் கவனமின்மை, முரண்பாடு, வாழ்க்கையில் தோல்வி

18. வாழ்க்கையில் ஒப்புரவின்மை அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல், கொலை, களவு, கள், காமம் ஆகியவற்றுக்கு இரையாதல்.



திருவள்ளுவர் ஓவ் (f) செற் பிரின்டிங், நல்லூர், யாழ்ப்பாணம்.